வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 30.10.2025 வியாழக்கிழமை இதழ் : 303 பக்கங்கள் : 08

# இலங்கையில் முதலீடுகளை செய்வதில் பல்வேறு தடைகள்

## நிலம் பெறுவது பெரும்பாடு என்கிறார் ஜேர்மன் தூதுவர்



கொழும்பு, ஒக்ரோபர்30

இலங்கையில் ஒரு வெளிநாட்டு முதலீட்டாளர் நிலத்தை வாங்குவது மிகவும் கடினமாகவுள்ளது. 30 ஆண்டுகள், 50 ஆண்டுகள் அல்லது 70 ஆண்டுகளுக்கு அதை குத்தகைக்கு எடுப்பது தொடர்பில் பல வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. ஜேர்மன் முதலீட்டாளர் ஒருவர் இலங்கையில் குத்தகைக்கு நிலத்தை பெற்று முதலீடு செய்யும்போது சங்கடப்படுகிறார். அதாவது தான் நிறைய பணம் முதலீடு செய்ய வேண்டும். இது ஜேர்மனியில் இருந்து வெகுதொலைவில் உள்ளது. நான் எனக்கு சொந்தமில்லாத நிலத்தில் முதலீடு செய்யவேண்டுமா? என்று ஜேர்மன் முதலீட்டாளர்கள் எண்ணுகின்றனர் என்று இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் பீலிக்ஸ் நியுமான் தெரிவித்தார்.

பாத்பைன்டர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற வட்டமேசை அமர்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் நடுநிலைமை ஜேர்மனிக்குச் சரியானது. இலங்கையின் நிலைப்பாடு "அனைவருக்கும் நண்பன்,

07

## வடக்கிலும் தென்னிலங்கையிலும் போதைப்பொருள் சுற்றிவளைப்பு!

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, ஒக். 30

நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் அதிகரிக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு

07

## தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல்!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 30

தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளதாகவும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதாக கூறியே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்ஜய பெரேரா தெரிவித்தார்.

07

## நவம்பர் 5இல் கூடுகிறது தமிழ் அரசு மத்திய குழு!

### 2026 வரவு - செலவு திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 30

வவுனியாவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி கூடவுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் 2026ஆம் ஆண்டுக் கான வரவு - செலவுத் திட்டத்தை ஷ

07

## பலாலியில் காணி விடுவிப்பு: உயர்மட்ட கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஒக் . 30

யாழ்ப்பாணம் - பலாலி பிரதேசத்தில் எஞ்சியுள்ள தனியார் காணிகளை உரிய உரிமையாளர்களிடம் விரைவாக ஒப்படைப்பது தொடர்பில் கவனம் செலுத்தி, செயற்பாட்டு மற்றும் நிர்வாகத் தடைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.

குறிப்பாக, இராணுவத்தின் கட்டம்

07

## ரணிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 30

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கின் விசாரணையை ஒத்திவைத்து, கொழும்பு கோட்டை நீதிவான் நெத்தி குமார நேற்று பிற்பகல் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில், அவரது மனைவி மைத்திரி விக்கிரமசிங்கவின்

07

## இலங்கையில் சுபீட்சத்துக்கான கதவுகளை சீனாவின் அடுத்த 5 வருட வளர்ச்சி திறக்கும்!

### இலங்கைக்கான சீன தூதுவர் நம்பிக்கை




கொழும்பு, ஒக். 30

சீனாவின் நீண்டகால ஒத்துழைப்புப் பங்காளி என்ற ரீதியில், அடுத்த 5 வருடகாலத்தில் சீனா அடையவிருக்கும் வளர்ச்சியானது இலங்கையின் அபிவிருத்திக்கும், சுபீட்சத்துக்கும் அவசியமான வாய்ப்புக்களை வழங்கும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சென்ஹொங் நம்பிக்கை

07

## யாழில் 3 மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழில், பிறந்து 3 மாதங்களேயான பெண் குழந்தை ஒன்று நேற்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

கீரிமலை - நல்லிணக்கபுரம் பகுதியை சேர்ந்த அரிய தாஸ் கஜிஷ்ணவி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை 23.07.2025 அன்று பிறந்துள்ளது. நேற்று தாயார் குறித்த குழந்தைக்கு

07

## பொலிஸ் மா அதிபரை சபைக்கு அழையுங்கள்!

### எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்பு, ஒக். 30

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடுவதற்காக பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவை பாராளுமன்றத்திற்கு அழைக்குமாறு எதிர்க்கட்சி, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்க பொலிஸ்

07

## அரச, தனியார் பஸ் சேவை குறித்து யாழ்ப்பாணத்தில் நேற்று ஆராய்வு



யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்து

07

## மாகாண சபைகள் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி வெல்லும்

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல நம்பிக்கை



கொழும்பு, ஒக். 30

மாகாணசபைத் தேர்தலில் 9 மாகாண சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றிநடை போடும் என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாக எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை வைத்தியசாலை முன் வீதி கனரக வாகனங்கள் செல்ல முற்றாக தடை



வடமராட்சி, ஒக். 30

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன் வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடந்த பருத்தித்துறை பிரதேச சபை அமர்வில் இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு அதன் தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நேற்று காலை 9:45 மணியளவில் பருத்தித்துறை பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் மண்ணுக்காக மரணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமானது.

இதில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன் வீதியால் கனரக வாகனங்கள் செல்வதை தடை செய்வதென்று தீர்மானிகயகப்பட்டது.

சபை அமர்வில் பருத்தித்துறை நகரசபை மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை என்பன இணைந்து கழிவுகளை ஒரிடத்தில் கொட்டி தரம் பிரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு பருத்தித்துறை பிரதேச சபை நகரசபையுடன் இணையாது தனியாகவே கழிவை தரம் பிரிப்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் சபையில் ஆராயப்பட்டது.

வீதிப் போக்குவரத்துக்கு பாதிப்பாகவுள்ள மரங்கள், மற்றும் கட்டுமானங்களை அகற்றுவது தொடர்பாக ஆராயப்பட்டு வீதிப் பயணிகளுக்கு இடையூறாகவுள்ள கட்டுமானங்கள் மற்றும் மரங்களை அகற்றுவதற்கு உரியவர்களுக்கு அறிவித்தல் வழங்கி அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதென்றும், பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களை தடை செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு காலை 6:30 தொடக்கம் 8:00 மணி வரையிலும், பிற்பகல் 12:30 தொடக்கம் 2:30 மணிவரையிலும் கனரக வாகனங்கள் செல்வதை தடை செய்வதென்றும், உரிய அறிவித்தல் பதாதைகள் இடுவதென்றும், மந்திகையிலுள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்வீதியால் கனரக வாகனங்கள் செல்வதை முற்றாக தடை செய்வது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சபை அமர்வில் 20 உறுப்பினர் களும் கலந்துகொண்டனர். (அ)

---

### பாடசாலை நேரத்தில் நீடிப்பு:

# மாணவர்களுக்கு போக்குவரத்து வசதி வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 30

பாடசாலை கல்வி செயற்பாடுகளுக்கான நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும், புதிய நேர அட்டவணையின்படி மாணவர்களுக்குப் போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக போக்குவரத்து அமைச்சுடன் ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளதாகவும் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

அதன்படி, தற்போது இயக்கப்படும் சிசு செரிய உட்பட அனைத்து பேருந்து சேவைகளும், பாடசாலை புதிய நேர அட்டவணையின்படி இயக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ், தரம் ஐந்து முதல் தரம் 13 வரையான அனைத்து வகுப்புகளுக்கான நேரமும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பிற்பகல் 2 மணி வரை நீடிக்கப்படுவதாக பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன கூறினார்.

# ஹெரோயினுடன் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் ஹெரோயின் போதைப் பொருட்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாண நகர் பகுதி, கொக்குவில் மற்றும் பொற்பதி பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

---

# பத்தாயிரம் கிலோவுக்கு அதிகமான பூசணியை சந்தைப்படுத்தமுடியாது அவதிப்படும் விவசாயி



முல்லைத்தீவு, ஒக். 30

முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரம் கொலணியை சேர்ந்த விவசாயி ஒருவர் தான் அறுவடை செய்த சுமார் 10 ஆயிரம் கிலோவுக்கு அதிகமான பூசணிக்காயை சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளார்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த துரை என அழைக்கப்படும் கமலராஜன் என்ற விவசாயி சுமார் நான்கு ஏக்கர் காணியில் பூசணியை பயிரிட்டுள்ளார். இதற்காக சுமார் நான்கு இலட்சம் ரூபாய் வரை செலவும் செய்திருக்கின்றார்.

இந்த நிலையில் பூசணிக்காய்களை அறுவடை செய்து விற்பனை செய்வதற்காக சந்தைக்கு கொண்டு சென்றபோது அவரால் அதனை சந்தைப்படுத்த முடியவில்லை.

ஆரம்பத்தில் கிலோ 20 ரூபாய் கேட்டுள்ளனர். இப்போது அந்த விலைக்கும் எவரும் கொள்வனவு செய்வதாக இல்லை எனத் தெரிவித்த அவர், சந்தைக்கு கொண்டு சென்ற பூசணிக்காய்களை மீண்டும் வீட்டுக்கொண்டு வந்து குவித்து வைத்துள்ளார்.

இவை நாளுக்கு நாள் பழுதடைகின்றன எனவும் என்ன செய்வது என்றே தெரியவில்லை எனவும் விவசாயத்தை கைவிட்டுவிடுவோமா என்ற மனநிலை தோன்றுவதாகவும் அவர் கூறினார். (அ)

---

# பரந்தன் பகுதியில் விடுவிக்கப்பட்ட காணி ஆவணம் அரச அதிபரிடம்!

கிளிநொச்சி, ஒக். 30

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் பரந்தன் பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட 1.5 ஏக்கர் காணிக்கான விடுவிப்பு ஆவணம் மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

நேற்று மாவட்ட செயலகத்தில் வைத்து காணி விடுவிப்புக்கான ஆவணத்தை இராணுவத்தினர் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனிடம் கையளித்தனர். இதன்போது கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (அ)

---

# வடகீழ் பருவமழை தொடர்பில் முன்னாயத்த கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக். 30

வரவிருக்கும் வடகீழ் பருவமழை வெள்ள முன்னாயுத்த நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது வடகிழக்கு பருவமழையால் ஏற்படும் சவால்களை நிர்வகிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ், காணிக்கான மேலதிக அரசாங்க அதிபர் அஜிதா பிரதீபன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் கே. அழகக்கோன், பிரதேச செயலாளர்கள், மாவட்ட பிரதம கணக்காளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், இராணுவத்தினர், கடற்படையினர், பொலிசார், மாவட்டத்திலுள்ள திணைக்களங்களின் தலைவர்கள், தொண்டு நிறுவனம் சார்ந்தோர் என பலர் கலந்து கொண்டனர். (அ)

---

# தடம் புரண்டது வான்!

முல்லைத்தீவு, ஒக். 30

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியில் பனிக்கன்குளம் பகுதியில் கொழும்பிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்த வான் ஒன்று வேக கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது.

கொழும்பு நோக்கி மக்களை அழைத்துச் சென்ற குறித்த வான், அவர்களை கொழும்பில் இறக்கிவிட்டு மீண்டும் கிளிநொச்சி நோக்கி வந்தவேளை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான வானில் சாரதி மட்டுமே இருந்த நிலையில் அவர் சிறிய காயங்களுடன் உயிர் பிழைத்துள்ளார்.

விபத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

---

# மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதான பணிகள் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஒக். 30

முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

2025ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் நெருங்கும் நிலையில் சிரமதான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லத்தின் முன்பகுதிக்கான வேலி அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

---

# ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியா இளைஞர் கைது!

வவுனியா, ஒக். 30

வவுனியா நகரப் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலைய டுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனையில் தலைமைப் பொலிஸ் நிலையப் போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி றிஸ்னி தலைமையில் வவுனியா நகரப் பகுதியில் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, 15 கிராம் ஐஸ் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன், அவரிடம் இருந்து ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டது.

மன்னார் பகுதியைச் சோந்த 23 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டு நிலையில் விசாரணைகளின் பின் குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.10.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இனப்படுகொலை விவகாரம்

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தில் இனப்படுகொலை நடந்ததா அல்லது நடக்கவில்லையா என்னும் விவாதம் பதினாறு வருடங்களாக இடம்பெற்று வருகிறது. இது, ஒருவகையில் கட்சிகளுக்கு இடையிலான போட்டியாகவும் சில தனிநபர்களை இலக்கு வைக்கும் பிரசாரங்களாகவுமே முன்னெடுக்கப்பட்டன. வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழ் குழுக்களோ இனப்படுகொலை தொடர்பில் தாராளமாகவே பேசி வருகின்றன.

மேற்குலகைப் பொறுத்தவரையில் - உதாரணமாக, கனடாவில் ஒரு குழு அல்லது ஒருநபர் தான் விரும்பும் விடயங்களைப் பேசுவதில் எவ்வித தடையும் இல்லை. இந்தப் பின்புலத்தில் கனடாவில் தமிழ் அமைப்புகளின் விருப்பத்துக்கமைய அங்குள்ள உள்ளூர் நிர்வாகத்தின் அனுமதியுடன் இனப்படுகொலை நினைவிடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு இனப்படுகொலை நினைவிடம் நிறுவப்பட்டுள்ள பகுதியில் - அருகில் சிறுவர்கள் விளையாடுவதற்கான இடமும் இருக்கிறது. அந்தப் பகுதி நகர அரசியல் பிரதிநிதியின் (சிற்றி கவுன்சிலர்) வேண்டுகோளுக்கு அமைவாக இவ்வாறான விடயங்களை மேற்கொள்ள முடியும். தற்போது, சுவிற்சர்லாந்தின் அரசியல் கட்சியொன்று அதன் மகாநாட்டில் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று குறிப்பிட்டிருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆர்மேனியாவில் இடம்பெற்ற படுகொலைகள் இனப்படுகொலை என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்திருந்தார். ஆனால், அது ஓர் அரசியல் உச்சரிப்பு மட்டும்தான். ஏனெனில், அந்த விடயத்தில் அமெரிக்க நிர்வாகம் அதற்கு மேல் கவனம் செலுத்தப் போவதில்லை. ஒருவேளை, அமெரிக்காவின் மூலோபாய நலன்களுக்கு அது தேவைப்பட்டால் அதனைக் கையிலெடுக்கக்கூடும்.

இலங்கையின் மனித உரிமைகள் மீறல் விவகாரத்தை சர்வதேசமயப்படுத்தியது அமெரிக்காதான். 2012இல், இலங்கைமீதான பொறுப்புக்கூறல் பிரேரணைக்கு அமெரிக்கா ஆதரவளிக்காது இருந்திருந்தால், இலங்கை விவகாரம் ஒரு பேசுபொருளாக இருந்திருக்காது. ஏனைய நாடுகளும் அவ்வாறானதொரு பிரேரணையைக் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், அமெரிக்காவின் தலையீட்டுக்கு அவை நிகராக இருக்காது.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே இனப்படுகொலை என்னும் சொல் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்பட்டது. ஏனெனில், அவ்வாறு ஒரு சொல்லைப் பயன்படுத்தினால் அதன் பின்னர் கொழும்புடன் உரையாடுவது கடினமாகிவிடும். ஏனெனில், இலங்கைமீதான பொறுப்புக்கூறல் பிரேரணையின் மீது நாடுகள் ஆர்வம் காண்பிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஈடுபாட்டுக்கும் இடையில் வேறுபாடு உண்டு. இதனை சரியாகப் புரிந்துகொண்டால் மட்டும்தான், இந்த விடயத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளமுடியும். ஆனால், தமிழ்ச் சூழலில் இனப்படுகொலை என்னும் சொல்லை உச்சரிப்பதானது ஒருவகை புளகாங்கிதத்துடன் நோக்கப்பட்டது. இப்போதும் அது தொடர்கின்றது.

காஸாவில் என்ன நடந்தது - என்ன நடக்கிறது என்பது உலகின் பார்வைக்குள் இருக்கிறது. உலகெங்கும் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகப் பல்லாயிரக்கணக்கானவர்கள் குரல் எழுப்புகின்றனர். அது ஓர் இனப்படுகொலை என்று ஐ. நா.வின் நிபுணர்கள் குழு கூறுகிறது. ஐ. நா. பொதுச் சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் 140இற்கும் மேற்பட்டநாடுகளின் ஆதரவுடன் இஸ்ரேலை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இஸ்ரேலை அடிபயணியச் செய்ய முடிந்ததா? இவ்வாறு கேட்கும்போது இஸ்ரேல் விடயத்தில் அமெரிக்கா இருப்பது போன்று, இலங்கை விடயத்தில் இருக்காது என்று பதில் வரக்கூடும். ஆனால், இலங்கை விடயத்தில் கொழும்பை முற்றிலுமாக விரோதித்துக்கொண்டு, அவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய அவசியம் அமெரக்காவுக்கு இருக்கிறதா? - ஏன் அவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்? இவ்வாறு கேட்டால் அதற்குப் பதிலளிக்கும் ஆற்றலோடு எந்தவொரு கட்சியின் தலைவரும் இல்லை. இறுதியில் நடக்கப் போவது என்னவென்றால், வெளித்தரப்புகள் ஒவ்வொன்றும் அவர்களுக்கான நலன்களைப் பெற்றுவிட்டு தமிழர் பிரச்னையை செல்லாக்காசாக்கி விட்டுச் சென்றுவிடும். தமிழர்களோ இருப்பதையும் பறிகொடுத்துவிட்டு, ஏதிலிகளாக அலைவர்.

## அரசின் வெங்காய கொள்வனவு திட்டம் நிபந்தனைகளால் விவசாயிகள் நெருக்கடி

*கொழும்பு, ஒக். 30*

*அரசாங்கத்தின் பெரிய வெங்காய கொள்வனவு திட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட கடுமையான நிபந்தனைகள் விவசாயிகளுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.*

*17 நிபந்தனைகளின் கீழ் நடைபெறும் இந்தக் கொள்வனவில், வெங்காயத்தின் அளவு, எடை மற்றும் தரம் தொடர்பான விதிகள் விவசாயிகளை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாக கூறப்படுகிறது.*

*அரசாங்கத்தின் கொள்வனவு நிபந்தனைகளின்படி, பெரிய வெங்காயத்தின் விட்டம் 35 இலிருந்து 65 மில்லி மீற்றருக்கு இடைப்பட்டதாக இருக்கவேண்டும்.*

*இதற்கு அப்பாற்பட்ட 65 மில்லி மீற்றருக்கு மேல் பெரிய அல்லது 35 மில்லி மீற்றருக்கு குறைவான சிறிய வெங்காயங்கள் மொத்தத் தொகையின் 10 வீதத்தை தாண்டிவிடக் கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது.*

*மேலும், ஒரு கிலோ வெங்காயத்தில் 8 காய்களுக்கு மேல் இருக்கக்கூடாது எனவும் தர நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.*

*இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு கிலோ பெரிய வெங்காயத்திற்கு 140 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*ஒரு விவசாயிகளிடம் இருந்து அதிகபட்சம் 2,000 கிலோ வரை கொள்வனவு செய்யப்படுகிறது.*

*இந்த நிபந்தனைகள் தங்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்துவதாக மாத்தளை, அநுராதபுரம், பொலநறுவை மாவட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.*

*(அ)*

## அடுக்குமாடி குடியிருப்பில் தீ!

*கொழும்பு, ஒக். 30*

*நாராஹேன்பிட்டி - தாபரே மாவத்தையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீப்பரவல் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.*

*நேற்று காலை இந்தத் தீ பரவல் ஏற்பட்டது. இதன்போது, தீயைக் கட்டுப் படுத்துவதற்காக 13 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. குறித்த குடியிருப்புத் தொகுதியின் நான்காவது மாடியில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டதுடன், மேல் மாடிகளில் சிக்கிய மக்கள் மீட்கப்பட்டனர். மக்களை மீட்பதற்காக "ஸ்கைலிஃப்ட்" வாகனங்கள் இரண்டும் பயன்படுத்தப்பட்டிருந்தன.*

*இதேவேளை, தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இந்தத் தீ விபத்தினால் ஒரு வீடு முழுமையாக எரிந்து நாசமாகின.*

*(அ)*

## 6 வயது சிறுமியை தகாத முறையில் தொட்ட குதிரை பராமரிப்பாளர் கைது

*கொழும்பு, ஒக். 30*

*விஹாரமஹாதேவி பூங்காவில் ஆறு வயது சிறுமியைத் தகாத முறையில் தொட்ட குற்றச்சாட்டில் குதிரை பராமரிப்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.*

*கடந்த 26 ஆம் திகதி, விஹாரமஹாதேவி பூங்காவுக்குத் தந்தை ஒருவர் தனது இரண்டு மகள்களுடன் பொழுதுபோக்குக்காகச் சென்றுள்ளார்.*

*இந்தநிலையில் இரண்டு சிறுமிகளும் குதிரை சவாரி செய்து, இறுதிச் சுற்றின்போது, சந்தேக நபர் சிறுமிகளில் ஒருவரை தகாத முறையில் தொட்டதாகக் கூறப்படுகிறது.*

*சம்பவத்தைக் கண்ட சிறுமிகளின் தந்தை, உடனடியாக தனது மகளை அழைத்துச் சென்று பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.*

*பின்னர் கறுவாத்தோட்டம் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.*

*சந்தேக நபர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி, குறித்த சந்தேக நபர் எந்த விதமான துஷ்பிரயோகத்தையும் செய்யவில்லை என்றும், சவாரியின்போது குதிரையிலிருந்து சிறுமி கீழே விழுவதைத் தடுக்க மட்டுமே சிறுமியைப் பிடித்ததாகத் தெரிவித்துள்ளார்.*

*முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களைப் பரிசீலித்த நீதிவான், சந்தேக நபரை தலா 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.*

*(அ)*

## யோஷித மீதான வழக்கு ஒத்திவைப்பு


*கொழும்பு, ஒக். 30*

*பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோ ருக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.*

*2009 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி முதல் 2013ஆம் ஆண்டு டிசெம்பர் 12ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சுமார் 59 மில்லியன் ரூபாய் பணத்தை மூன்று வங்கி கணக்குகளில் வைப்புச் செய்துள்ளமை தொடர்பில் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.*

*நேற்று புதன்கிழமை விசாரணைகளின் பின்னர் வழக்கு டிசெம்பர் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 30 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 13
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : நவமி




**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். உறவினர்களின் ஆதரவு பெறுவீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உடல் நலம் பாதிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். அதிகாரிகளிடம் அளவாக பழகுங்கள்.

**கடகம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது நல்லது. விழிப்புடன் செயல்படவேண்டிய நாள்.

**கும்பம்**
உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். சக ஊழியர்களை அனுசரித்துப் போவது நல்லது.

**மீனம்**
அதிரடியான சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். இனிமையான நாள்.

# போதைக்கு அடிமையானோருக்கு புனர்வாழ்வு அளிக்கப்படும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கிளிநொச்சி, ஒக். 30

போதைக்கு அடிமையான இளைஞர்களை நீதிமன்றம் அனுப்பாமல் அவர்களுக்கு பெற்றோரின் விருப்பத்துக்கு ஏற்றவாறு புனர்வாழ்வு அளிக்கப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

பூநகரி மடத்தடி பிள்ளையார் ஆலயத்துக்கு சென்று வழிபட்டபோது மக்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"உங்களுக்கு நிறைய பிரச்னை உள்ளது. போதைப்பொருளுக்கு தீர்வு காண பொலிஸ் குழுக்களை நியமிப்போம். அதற்கான சுற்று நிருபம் வந்துள்ளது. சுற்றிவளைப்பு செய்ய வேண்டுமாக இருந்தாலும் செய்வோம்.


"யாரும் பயப்பட வேண்டியதில்லை. நல்லதொரு பாதுகாப்பான நாட்டுக்காகவே ஒரு வருடத்துக்கு முன்பு ஜனாதிபதி தலைமையில் அரசாங்கத்தை அமைத்துக்கொண்டோம்" - என்றும் தெரிவித்தார். (ஐ)

# கௌ பே மூலம் அபராதம் வடக்கில் ஆரம்பமானது!

கிளிநொச்சி, ஒக். 30

அரசாங்க டிஜிற்றல் கட்டணத் தளமான "கௌ பே" (GovPay) மூலம் வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துக்கான அபராதம் செலுத்தும் முறை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக திறன்விருத்தி மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால இதனை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் திலக் சி ஏ தனபால, வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் எச். ஏ. கே. ஏ இந்திக்க ஹப்புகொட, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு



மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ சந்திரசேன, யாழ்ப்பாணம், காங்கேசன்துறைக்கான பிரதி பொலிஸ்மா அதிபர் ஜி. எச் மாரப்பன, வவுனியா பிரிவு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டபிள்யூ. ஏ சோமரத்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# வன்னி கால்நடை மருத்துவர்களுக்கு வாகன வசதி வழங்கலில் முன்னுரிமை

யாழ்ப்பாணம், ஒக். 30

வன்னிப் பிரதேச கால்நடை மருத்துவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாகன வசதிகள் செய்து வழங்குவதற்கும் ஆளணிகளை வருடாந்த இட மாற்றத்தில் நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கால்நடை மருத்துவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் அபிவிருத்தி முன்மொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல்வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது, கால்நடை மருத்துவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

ஆளணிப் பற்றாக்குறை, வாகனப் பிரச்னை என்பன முன்வைக்கப்பட்டது. அத்துடன் கால்நடைகளுக்கான மருந்து வழங்கலுக்கு மாகாண ரீதியிலான பொறிமுறையை உருவாக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வன்னி பிரதேச கால்நடை மருத்துவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாகன வசதிகள் செய்து வழங்குவதற்கும் ஆளணிகளை வருடாந்த இடமாற்றத்தில் நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் உறுதியளித்தார்.

இதேபோன்று கால்நடைகளுக்கான மருந்து வழங்கலுக்கு, கால்நடை மருத்துவர்களையும் பொறிமுறையை முன்மொழியுமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். (ஐ)

# மீண்டும் வர்ண இரவு விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 30

கடந்த காலங்களில் நடைபெற்ற வர்ண இரவு விருது வழங்கலை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உத்தரவிட்டதற்கமைய, அதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் மாவட்ட, பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு டிராக்டர்கள் சிக்கின!

## சந்தேகநபர் ஒருவரும் கைது

தென்மராட்சி, ஒக். 30

கிளாலியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு டிராக்டர்களை கைப்பற்றிய கொடிகாமம் பொலிஸார் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்தனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை 3 மணியளவில் இந்தக் கைது இடம்பெற்றது.

குற்றங்களை கட்டுப்படுத்த கொடிகாமம் பொலிஸார் விசே[illegible] நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதன் ஓர் அங்கமாகவே, நேற்றைய தினம் மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு டிராக்டர்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவத்தின்போது தப்பியோடியவர்கள் தொடர்பில் விசாரித்து வருவதாகவும் அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் 21ஆம் திகதி போராட வாருங்கள்!

## சஜித் அணிக்கு மொட்டு அழைப்பு

கொழும்பு, ஒக். 30

**நுகேகொடையில் எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்க எதிர்ப்புக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்கவேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சி அழைப்பு விடுத்துள்ளது.**

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேற்படி அழைப்பை விடுத்தார்.

நுகேகொடை கூட்டத்தில் தமது கட்சி பங்கேற்காது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள நிலையிலேயே, மொட்டு கட்சி தரப்பில் இருந்து இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் வேலைத்திட்டம் 21 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் ஐக்கிய மக்கள் சக்தியும் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம். இது தனி நபர்களை பிரசாரப்படுத்தும் கூட்டம் அல்ல. எனவே, இதில் பங்கேற்பதால் கட்சிகளின் தனித்துவத்துக்கு பாதிப்பு ஏற்படாது." எனவும் மேற்படி ஊடக சந்திப்பின்போது ஜானக வக்கும்புர தெரிவித்தார். (அ)

# 4 கட்டடங்களை நீதி அமைச்சுக்கு வழங்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக். 30

நாட்டில் புதிய மேல் நீதிமன்றங்களை துரிதமாக நிறுவும் நடவடிக்கைகளுக்காக, பொது நிர்வாக அமைச்சின் கட்டுப்பாட்டில் இருந்த நான்கு கட்டடங்களை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக பதில் அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊழல் எதிர்ப்பு தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய மேல் நீதிமன்றங்களைத் ஸ்தாபிக்கும் பணியை நடைமுறைப்படுத்துவதற்காக, பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைய, கொழும்பிலுள்ள நான்கு முகவரிகளில் அமைந்துள்ள கட்டடங்கள் நீதி அமைச்சுக்குக் கையளிக்கப்படவுள்ளன. புதிய நீதிமன்றங்களை அமைப்பதன் மூலம் நீதிச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதுடன், தேசிய ஒருமைப்பாட்டு இலக்குகளை அடைவதும் இந்த நடவடிக்கையின் நோக்கம்-என்றார். (அ)

# கணேமுல்ல சஞ்ஜீவ கொலைக்கு உதவி செய்த சட்டத்தரணி கைது!

கொழும்பு, ஒக். 30

கணேமுல்ல சஞ்ஜீவ கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு உதவிய பெண் சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஷாரா செவ்வந்திக்கு போலி சட்ட அடையாள அட்டையை வழங்கிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர் கடவத்தை பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# போக்குவரத்து அபராதங்களை ஒன்லைனில் செலுத்தும் வசதி!

கொழும்பு, ஒக். 30

பொலிஸாரால் அறவிடப்படும் போக்குவரத்து மீறல் அபராதங்களை ஒன்லைனில் செலுத்த அனுமதிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் டிசெம்பர் முதல் நாடளாவிய ரீதியில் அமுலுக்கு வரும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பொது சேவைகளை டிஜிற்றல் மயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முயற்சி அறிமுகப்படுத் தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# தம்புள்ளை, திருமலையை உலகத் தரத்துக்கு உயர்த்துவதற்கு 100 மில்லியன் டொலர் கடன்

## ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புதல்

கொழும்பு, ஒக். 30

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 3,000 கோடி இலங்கை ரூபா) கடனுதவித் தொகுப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத் தொகை, நாட்டின் தேசிய சுற்றுலா கொள்கையுடன் இணைந்து, கொள்கை மறுசீரமைப்புகள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட முதலீடுகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த நிதியுதவியானது, நிலையான சுற்றுலாத் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 70 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகைக் கடனாகவும், 30 மில்லியன் அமெரிக்க டொலர் வழக்கமான கடனாகவும் வழங்கப்படுகிறது.

குறிப்பாக, தம்புள்ளை (சிகிரியா உட்பட) மற்றும் திருகோணமலை ஆகிய இரண்டு முக்கிய சுற்றுலாத் தலங்களின் நிலையான சுற்றுலா மற்றும் நகர்ப்புற மேம்பாட்டில் இந்தத் திட்டம் விசேட கவனம் செலுத்தும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம், நிர்வாகம், சொத்து முகாமை, சுற்றுலா ஊக்குவிப்பு, திறன் மேம்பாடு, டிஜிற்றல்மயமாக்கல் போன்ற துறைகளில் நிறுவன மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்.

மேலும், தனியார் துறையின் பங்களிப்பை மேம்படுத்துதல், சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் அந்நியச் செலாவணி வருவாயை அதிகரித்தல், உட்கட்டமைப்பு இடைவெளியைக் குறைத்தல் மற்றும் உயர்தரச் சந்தைப்படுத்தலை வலுப்படுத்துதல் போன்ற பல விடயங்களில் இந்த நிதி ஆதரவளிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் நாட்டுப் பணிப்பாளர் தகுமி கடோனோ, "சரியான கொள்கை மறுசீரமைப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மூலம் சுற்றுலாத் துறையானது உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு இயந்திரமாக மாற முடியும்" எனக் குறிப்பிட்டார்.

# வாகனங்களுக்கு 15 வீதம் வரி விலைகள் அதிகரிக்கக்கூடும்

கொழும்பு, ஒக். 30

வாகனங்களுக்கு 15 வீத வரி விதிக்க அரசாங்கம் முன்மொழிந்துள்ளதைத் தொடர்ந்து நாட்டிலுள்ள சகல வகையான வாகனங்களின் விலைகளும் கட்டுப்படியாகக்கூடிய வரம்புகளுக்கப்பால் அதிகரிக்கக்கூடுமென்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் பிரசாத் மானகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2026ஆம் வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் இந்த விலை அதிகரிப்பு அமுலுக்கு வருமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நுகர்வுக்கான சகல வரிகளையும் இல்லாமலாக்கியதன் பின்னர், நாட்டில் வாகனத்தின் மதிப்பின் அடிப்படையில் வாகன இறக்குமதி வரிகள் கணக்கிடப்படுகின்றன. இறக்குமதியாளர்கள் தற்போது மொத்த விலையில் 15 வீத தள்ளுபடியைப் பெறுகிறார்கள். அதாவது மதிப்பில் 85 வீதம் மட்டுமே வரிக்கு உட்பட்டது. வரவு-செலவுத் திட்டத்துக்கு பின்னர் இந்த 15 வீத தள்ளுபடியை நீக்கவும் வாய்ப்புள்ளது.

தள்ளுபடி நீக்கப்பட்டால், ஜப்பானில் தயாரிக்கப்பட்ட குறைந்த விலையிலான அல்டோ முதல் உயர்நிலை வகை வரையான வாகன விலைகள் கணிசமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம்தள்ளுபடி முறையை தவறாகப் புரிந்துகொள்கிறது. இறக்குமதியாளர்கள் புத்தம் புதிய வாகனங்களை இறக்குமதி செய்யும் போது தானாகவே 15 வீத நன்மையைப் பெறுவார்கள் என்று நம்புகிறோம். உண்மையில், இந்த வரி 2023 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாகனங்களுக்குப் பொருந்தும்.

2015 முதல் இறக்குமதியாளர்கள் பெற்றுவரும் தள்ளுபடியை நீக்கக் கூடாது. விலை உயர்வு தனிப்பட்ட ரீதியில் வாங்குபவர்களையும் மொத்த இறக்குமதியாளர்களையும் பாதிக்கும். முன்மொழியப்பட்ட வரிக்குப் பின்னர், ஒரு சுசுகி வேகன் ஆர் சுமார் 400,000 ரூபா அதிகரிக்கக்கூடும். அதே நேரத்தில் ஒரு டொயோட்டா லாண்ட் குரூசர் குறைந்த பட்சம் 3 மில்லியன் ரூபா வரை அதிகரிக்கக்கூடும்.

இறக்குமதி செய்யப்பட்ட வாகனச் சந்தையிலும் கணிசமான விலை உயர்வுகள் ஏற்படக்கூடும். வரி அதிகரிப்பு குறித்து அரசாங்கம் இறுதி முடிவை எடுக்கவில்லை. ஆனால் அதிகாரிகளிடமிருந்து வந்த தகவல்களின் அடிப்படையில், நாங்கள் இந்த அறிவிப்பை வெளியிடுகிறோம். இது 2026 பட்ஜெட்டில் சேர்க்கப்படும் என்று நம்புகிறோம்-என்றார். (அ)

# கொழும்பு துறைமுகத்தில் ஜப்பானிய போர்க்கப்பல்!

கொழும்பு, ஒக். 30


ஜப்பானிய கடற்படையின் அகிபோனோ என்ற போர்க்கப்பல், நேற்று முன் தினம் காலை நல்லெண்ணப் பயணமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

150.5 மீற்றர் நீளமுள்ள நாசகாரி போர்க்கப்பலான அகிபோனோவில், 158 மாலுமிகள் உள்ளனர்.

கொழும்பில் தரித்து நிற்கும் போது, கப்பலின் பணியாளர்கள் இலங்கையின் சில சுற்றுலா தலங்களை பார்வையிடுவார்கள்.

அத்துடன் இரு கடற்படைப் படைகளுக்கும் இடையிலான நட்பு மற்றும் ஒத்துழைப்பின் பிணைப்புகளை வலுப்படுத்த வடிவமைக்கப்பட்ட இலங்கை கடற்படையுடனான தொழில்முறைப் பயிற்சிகளும் இடம் பெறவுள்ளன.

ஜப்பானிய போர்க்கப்பல், கொழும்பு கடலில் இலங்கை கடற்படைக் கப்பலுடன் ஒரு பயணப் பயிற்சியை நடத்திய பின்னர், 31ஆம் திகதி நாட்டை விட்டுப் புறப்படும். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் மஹா விகாரையை தரிசித்தார் இந்திய தூதுவர்



பொத்துவில், ஒக். 30

பொத்துவில்- முஹூது மஹா விகாரையை இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேரில் தரிசித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பொத்துவிலுக்கு சென்ற இந்திய தூதுவரும் அவரின் பாரியாரும் விகாராதிபதி வரக்காபொல இந்திரசிறி தேரரை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் விகாரை தொடர்பான குறைபாடுகளை கேட்டறிந்தனர்.

இதன்போது விகாராதிபதி தனது விகாரை தொன்மையான வரலாற்றை கொண்டதாகவும் விகாரைக்குரிய காணிகளை சிலர் அபகரித்துள்ளனர் என்றும் வடக்கு, கிழக்கில் உள்ள தொல்லியல் இடங்கள் பாதுகாத்து அதனை மக்கள் பார்வையிட செய்வதால் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பதுடன் அந்த பகுதியில் மக்களின் வாழ்வாதாரம் சிறப்பாகும் என்றும் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்தியத் தூதுவர் விகாரைக்கு சூரிய மின்சாரம் அமைப்பதற்கான முதல் கட்ட நிதி அரசாங்கத்திடம் வழங்கியுள்ளோம் என்றும் மிகுதி பணம் மிக விரைவில் வழங்கப்படும் - என்றும் குறிப்பிட்டார். (ஐ)



# சரோஜா விழிப்புணர்வு ஸ்ரிக்கர் ஒட்டும் பணி

அக்கரைப்பற்று, ஒக். 30

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் "சரோஜா" எனும் பாதுகாப்பற்ற சிறுவர், சிறுமியர் தொடர்பிலான விழிப்புணர்வு ஸ்ரிக்கர் ஒட்டும் வேலைத் திட்டம் கல்முனை நகரில் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஏ.எல்.லசந்த களுஆராச்சி தலைமையில் முன்னெடுக்கப்பட்டநேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொது போக்குவரத்து சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் மற்றும் அரச, தனியார் பஸ்கள் அனைத்திலும் இந்த ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டது.

இதில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், கல்முனை பிரதேச செயலகம் மற்றும் கல்முனை உப பிரதேச செயலக சிறுவர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதேபோன்று சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ். எம். சம்சுதீன் தலைமையில் சாய்ந்தமருது பிரதேசத்திலும் குறித்த ஸ்ரிக்கர் ஒட்டும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ லொறி மோதி டிராக்டர் சாரதி படுகாயம்

திருகோணமலை, ஒக். 30

இராணுவ முகாமுக்கு உணவு கொண்டு சென்ற லொறி உழவு இயந்திரத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில், உழவு இயந்திரச் சாரதி படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து குறித்து மேலும் தெரியவருகையில்,

கந்தளாய் பேராறு பகுதியிலிருந்து உழவு இயந்திரம் ஒன்று வயல் உழவுப் பணிகளுக்காக சேருநுவர வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தது. இதேவேளை, சேருநுவர கல்லாறு இராணுவ முகாமுக்கு உணவு விநியோகம் செய்துவிட்டு கொழும்பு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த லொறி ஒன்று கந்தளாய்-சேருநுவர வீதியில் எதிர்பாராத விதமாக உழவு இயந்திரத்துடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

இந்த விபத்தினால் உழவு இயந்திரம் பலத்த சேதமடைந்ததுடன், அதனை செலுத்திய சாரதி படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மேலும், சம்பவம் குறித்து கந்தளாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கேரள கஞ்சாவுடன் தம்பதியர் கைது!

அக்கரைப்பற்று, ஒக். 30

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கேரளா கஞ்சாவுடன் தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய உப பொலிஸ் பரிசோதகர் ஆப்தீன் தலைமையிலான குழுவினர் சந்தேக நபர்களை கைது செய்தனர். இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 9 கிராமும் 610 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அத்துடன், இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

# கடையில் வாங்கிய கேக்கில் பல்லி சிறார் இருவர் மருத்துவமனையில்!

நுவரெலியா, ஒக். 30

பிறந்தநாளுக்கு வாங்கிச் சென்ற ஐசிங் கேக்கில் இறந்த பல்லி ஒன்று காணப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியதோடு 2 சிறுவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த திங்கட்கிழமை பிறந்தநாள் கொண்டாடுவதற்காக மஸ்கெலியா நகரத்தில் உள்ள வெதுப்பகம் ஒன்றிலிருந்து ஐசிங் கேக் ஒன்றை வாங்கி சென்றுள்ளனர்.

அந்த பிறந்தநாள் விழாவில் கேக் வெட்டப்பட்டு, அனைவருக்கும் ஊட்டப்பட்டுள்ளது. அதன் பின்னர் மீதமிருந்த கேக்கை பார்த்தபோது, அதில் இறந்த நிலையில் பல்லி ஒன்று கிடந்துள்ளது.

இதனால், குறித்த கேக்கை சாப்பிட்ட 5 வயது பெண் பிள்ளையும் 3 வயதான ஆண் குழந்தையும் மஸ்கெலியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவம் குறித்து பொது சுகாதார அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)



# தென் எருவில்பற்றில் இலக்கிய விழா சிறப்பு

காரைதீவு, ஒக். 30

கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த பிரதேச இலக்கிய விழா நிகழ்வானது பிரதேச செயலாளரும் பிரதேச கலாசார அதிகார சபையின் தலைவருமான உ. உதயசிறீதர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களம், பிரதேச செயலகம் இணைந்து பிரதேச மட்டத்திலான கலை இலக்கிய திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பமாக இது அமைந்தது.

இந்த நிகழ்வில் பிரதேச இலக்கிய விழாவை முன்னிட்டு பிரதேச செயலக பிரிவிலிருந்து மாவட்ட மட்டம் மற்றும் தேசிய ரீதியில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், அவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# கிளீன் சிறீ லங்கா திட்டத்தின் கீழ் 68 வீடுகள் மக்களிடம் கையளிப்பு

கண்டி, ஒக். 30

கிளீன் சிறீ லங்கா வேலைத் திட்டத்தின் கீழ் 'அழகான நாடு - வளமான குடும்பம்' என்ற தொனிப்பொருளில் நிர்மாணிக்கப்பட்ட 68 வீடுகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன.

கண்டி - பன்வில - கெலெபொக்கா தோட்டத்தின் தியனில்ல பிரிவில் அமைக்கப்பட்ட வீடுகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ. எம். பஸ்நாயக்க, உள்ளூராட்சி அதிகாரிகள், விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திர கீர்த்தி, கண்டி மாவட்ட செயலாளர் , இலங்கை விவசாய திணைக்களத்தின் தலைவர், அரச அதிகாரிகள் பிரதேச மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# மகளின் பிறந்தநாளை கொண்டாட மலையில் நடந்து ஏறியவர் மரணம்

பதுளை, ஒக். 30

எல்ல மலைப் பகுதியில் நடந்து சென்று தனது மகளின் 34ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிய பிரித்தானிய பிரஜை திடீரென உயிரிழந்தார். அவர் மாரடைப்பாலேயே உயிரிழந்தார் என்று உடல்கூராய்வு அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

பிரித்தானியாவின் ஒக்பாத்தைச் சேர்ந்த 63 வயதான பிரட் மக்லீன் என்ற பிரித்தானிய பிரஜையே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 16ஆம் திகதி தனது மகளுடன் இலங்கை வந்த அவர் கடந்த 23ஆம் திகதி பதுளை - எல்ல பகுதிக்கு சென்றனர். அப்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் சடலம் நீதிவானின் உத்தரவை தொடர்ந்து உடல் கூராய்வு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விழிப்புணர்வு ஊர்வலம்

திருகோணமலை, ஒக். 30

திருகோணமலை கிண்ணியா ரீ. பி. ஜாயா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தால் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.

தேசிய வாசிப்பு மாதமான ஒக்ரோபர் மாதத்தை சிறப்பிக்கும் வகையிலும் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கிலும் " புத்தகம் வாசிப்போம் - உலகை வெல்வோம்" என்ற தொனிப்பொருளில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

அதிபர் எஸ். ரீ. நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு ஊர்வலம் வித்தியாலய முன்றலில் ஆரம்பமாகி, திருகோணமலை - கண்டி பிரதான வீதி வழியாகப் பயணித்து, திருகோணமலை - மட்டக்களப்பு வீதியை அடைந்து, மீண்டும் பாடசாலையை அடைந்தது.

இந்த ஊர்வலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலியில்...

கட்டமான பின்வாங்கல் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது.

கொழும்பில் உள்ள பிரதி பாதுகாப்பு அமைச்சர் அலுவலகத்தில், குறித்த பகுதி களில் உள்ள தனியார் காணிகளை உரிமை யாளர்களிடம் விடுவிப்பது தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும், தொடர்ந்துள்ள சவால்களை எதிர்கொள் வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரை யாடல் நடைபெற்றது. பிரதி பாதுகாப்பு அமைச்சர அருண ஜயசேகர தலைமை யில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

குடிமக்களின் சொத்துகளில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் அதேவேளை, அத்தியாவசிய பாதுகாப்புத் தளங்களுக் குத் தொடர்ந்து பாதுகாப்பு அளிப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் புதிய எல் லைகளைத் திட்டமிடுவது குறித்து இறுதி செய்யப்பட்டன.

காணிகளை விடுவிக்கும் பணியை துரி தப்படுத்த இராணுவத்தின் கட்டம் கட்ட மான பின்வாங்கல் குறித்து மீளாய்வு செய் யப்பட்டது. பிரதி பாதுகாப்பு அமைச்ச ரும் பாதுகாப்பு செயலாளரும் தேசிய நல்லிணக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாக காணி தொடர் பான பிரச்னைகளை தீர்ப் பதற்கான அரசாங்கத்தின் அசைக்க முடி யாத உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர்.

தேசிய பாதுகாப்பு கருத்தாய்வுகளு டன் ஒத்துப்போகும் வகையில், இந்தச் செயல்முறை வெளிப்படையாகவும் சமத்துவமாகவும் பேணப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (அ)

## தேசிய பாதுகாப்பு...

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

தற்போதை பாதுகாப்பு பிரதி அமைச் சர் கடந்த அரசாங்க காலத்தில், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கற்பிப்பதாக தெரிவித்தார். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. ஆனால், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் மக்க ளின் அன்றாட வாழ்க்கைக்கும் அச்சுறுத் தல் ஏற்பட்டுள்ளதை அனைவரும் அறி வார்கள். சமீப நாட்களில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்தான் பிரதான தலைப் புச் செய்தியாக மாறியிருந்தது. சுமார் 100இற்கும் அதிக துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் - 56 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கை வரலாற்றில் பிரதேச சபை தலைவர் ஒருவர் அவரது கடமை நேரத் தில் உத்தியோகபூர்வ அறையில் வைத்து சுட்டுக்கொல்லப்படுகிறார். நீதி மன்ற வழக்கு நடவடிக்கையின்போது நீதிமன் றத்திற்குள் பிரதிவாதி நோக்கி துப்பாக் கிச் சூடு இடம்பெற்றுள்ளது. இந்த நாட் டில் இதற்கு முன்னர் இவ்வாறு நடக்க வில்லை. எனவே தேசிய பாதுகாப்பு மற்றும் மக்களின் பாதுகாப்பு இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. ஏதேனும் குற்றச் சம்பவம் இடம்பெற்றவுடன் அர சாங்கம் இதிலிருந்து தப்பிக்க இதனை பாதாள உலகக் குழுதான் செய்தது என்று கூறுகிறது - என்றார். (அ)

## மாகாண...

"பாராளுமன்றத்தில் சலுகைகள் கிடைக்காததால் எதிரணி எம்.பிக்கள் சிலர், பதவி துறந்துவிட்டு முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு முற் படுகின்றனர். இது அவர்களுக்குள்ள உரிமை. அதனை நாம் சவாலுக்குட்படுத் தவில்லை.

எதிரணிகள் ஒன்று சேர்ந்து போட்டி யிட்டால்கூட எமக்கு சவால் இல்லை. 9 சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும்." எனவும் சுனில் வட்டகல தெரிவித்தார். (அ)

## யாழில் 3...

பாலூட்டிய பின்னர் சிறிது நேரத்தில் மூக்காலும் வாயாலும் இரத்தம் வந்த நிலையில் குழந்தை மயங்கியது.

பின்னர் தெல்லிப்பழை வைத்தியசா லைக்கு கொண்டு செல்லப்பட்டவேளை குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்ட தாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார். உடற்கூற்று பரிசோதனை களுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-05)

## ரணிலுக்கு...

பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற் காக, பிரித்தானியா செல்வதற்கு அரச நிதியை பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில், இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு, கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னி லையாகியிருந்த போது, அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணை யில் விடுவிக்கப்பட்டார்.

அதனையடுத்து, இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றில் ஆஜராகியி ருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை களை விரைவுப்படுத்தி, சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, நீதீவான், குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரி களுக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், வழக்கு, எதிர்வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் எனவம் நீதீவான் உத்தரவிட்டார். (அ)

## இலங்கை...

வெளியிட்டுள்ளார்.

15ஆவது தடவையாக நடைமுறைப்ப டுத்தப்படும் ஐந்தாண்டுத் திட்ட அமு லாக்கத்தை அடுத்து "புத்தாக்கம் பகிரப் பட்ட அபிவிருத்திக்கு வாய்ப்பளிக்கிறது" எனும் தலைப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள மரினோ ஹோட்டலில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே சீனத்தூ துவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## வடக்கிலும்...

விஜயம் மேற்கொண்டதன் பின்னர் ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

இதேவேளை, இலங்கை போதைப் பொருள் கடத்தல் காரர்களின் மையமாக மாறி வருகிறதா என்ற சந்தேகம் நிலவுவ தாகச் சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா கூறுகிறார்.

மேலும், சுங்கத் திணைக்களத்திற்காக அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வருமான இலக்கை, இன்னும் 3 வாரங் களுக்குள் அடைய முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (அ)

## பொலிஸ் மா...

மா அதிபருடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு எதிர்க்கட்சி, சபாநாயக ரிடம் கோரிக்கை விடுத்ததாக எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவான பாரா ளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதி லக்க குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், சபாநாயகர் தற் போது வெளிநாட்டுப் பயணத்தில் ஈடு பட்டுள்ளதால், குறித்த கடிதம் சபாநா யகர் அலுவலகம் ஊடாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.அதன்படி, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஒரு திகதியை வழங்கும் என்று தாம் நம்பு வதாக அவர் குறிப்பிட்டார்.

## நவம்பர் 5இல்...

ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது உள்ளடங்கலாக அதனை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி ஆராயப்படவுள்ளது.

2026 நிதியாண்டுக்கான வரவு - செல வுத் திட்டத்தை நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைத்து விசேட உரையாற்றவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இரண்டாவது தடவையாக பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கவுள்ள இந்த வரவு - செலவுத் திட்டத்தில் 2026ஆம் ஆண்டுக் கான மொத்த அரசாங்க செலவினர் 4,434 பில்லியன் ரூபாயாக மதிப்பிடப் பட்டுள்ளது.

குறிப்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 618 பில்லி யன் ரூபா நிதியும், பொதுநிர்வாக அமைச் சுக்கு 596 பில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பாதுகாப்பு அமைச் சுக்கு 455 பில்லியன் ரூபாயும், கல்வி அமைச்சுக்கு 301 பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் வரவு, செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதா அல்லது எதிராக வாக்க ளிப்பதா என்பது குறித்தும், இவ்வரவு, செலவுத்திட்டத்தை எவ்வாறு கையாள் வது என்பது குறித்தும் கட்சியுடன் கலந்துரையாடித் தீர்மானிக்கவேண்டும் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன் றக்குழு தெரிவித்திருந்தது.

அதன்படி எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி வவுனியாவில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியா வில் கூடவுள்ள நிலையில், இக்கூட்டத் தில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர் பில் ஆராயப்படும் என்று எம்.ஏ. சுமந் திரன் தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கையில் முதலீடுகளை...

எவருக்கும் எதிரி அல்ல" என்பது எனக் குத் தெரியும். இதன் பொருள் என்ன வென்றால், இந்தியப் பெருங்கடலில் மிக முக்கியமான இடத்தில் அமைந்துள்ள இலங்கை, அனைவருக்கும் நியாயமாக இருக்க முடிவு செய்துள்ளது. எல்லோ ரும் இந்தக் கடலில் செல்லவும், ஆழ்க டல் துறைமுகங்களைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆனால், கட்டணம் செலுத்த வேண் டும், அது நியாயமானது. ஏனெனில், நீங்கள் இந்தத் துறைமுகங்களைப் பராமரிக்கிறீர்கள். "இந்த உலகத்தின் ஒரு பகுதி மட்டும், இந்த நாடுகள் மட்டும் அனுமதிக்கப்படும், இந்த நாடு அனும திக்கப்படாது" அல்லது "எங்களுக்கு இந்த நாட்டுடன் ஒரு பிரச்னை உள்ளது" என்ற நிலைப்பாடு இங்கு இல்லை. இலங்கை இதற்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய அளவிற்குப் புத்திசாலித்தனமாக உள்ளது. இதனையே கடற்பயணச் சுதந்திரம் என்ற சர்வதேசக் கொள்கையும் விரும்புகிறது. அமைதியான கடற்பய ணச் சுதந்திரம் என்பது இலங்கையின் நடுநிலைமைக்கு முரண்பாடு அல்ல. அதைப் பேணுவதில் இலங்கை புத்திசாலித்தனமாக உள்ளது.

இலங்கையுடனான வர்த்தகத்தை பொறுத்தவரையில் 300க்கும் மேற்பட்ட ஜேர்மன் வர்த்தகப் நாமங்கள் செயல்ப டுகின்றன. கிட்டத்தட்ட ஒவ்வொரு துறையும் இங்கு ஏதோ ஒரு வகையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

நான் ஜேர்மன் நிறுவனங்களுடன் பேசும்போது, அவர்கள் என்னிடம், "இலங்கையுடனான வர்த்தகம் மேம்பட்டு வருகிறது, ஆனால் அதிகாரத்துவம் விரை வாக இருந்தால், ஊழலற்ற கொள்கை தொடரும் என்று நாங்கள் உறுதியாக நம்பினால், எங்கள் முதலீடுகள் பாதுகாக்கப்படும் என்றால், நாங்கள் அதிகமாக முதலீடு செய்யலாம்" என்று கூறுகிறார்கள்.

இலங்கை, உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டையும் போலவே, ஒரு போட்டி யில் உள்ளது. உற்பத்தி செய்வதற்கான உரிமம் அல்லது ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்கான அனுமதியைப் பெற அவர்கள் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும் என்பதை அவர்கள் பிராந்தி யத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் ஒப் பிடுகிறார்கள். இங்கு இலங்கையில், ஒரு வெளிநாட்டு முதலீட்டாளர் நிலத்தை வாங்குவது மிகவும் கடினமாகவுள்ளது.

30 ஆண்டுகள், 50 ஆண்டுகள் அல்லது 70 ஆண்டுகளுக்கு அதை குத்தகைக்கு எடுப்பது குறித்து நீண்ட கேள்விகள் உள்ளன. ஜேர்மன் முதலீட்டாளர் ஒரு வர் இலங்கையில் குத்தகைக்கு நிலத்தை பெற்று முதலீடு செய்யும்போது சங்க டப்படுகிறார். அதாவது தான் நிறைய பணம் முதலீடு செய்ய வேண்டும். இது ஜேர்மனியில் இருந்து வெகு தொலை வில் உள்ளது, நான் எனக்கு சொந்தமில் லாத நிலத்தில் முதலீடு செய்யவேண் டுமா? என்று எண்ணுகிறார்.

ஆனால் இவை அனைத்தும் இலங் கையின் இறையாண்மை முடிவுகள். ஆனால், பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகள் இந்தக் சாத்தியக்கூறுகளை வழங்குகின்றன என்பதனை புரிந்து கொள்து அவசியமாகும்.

புதிய தகவல் தொடர்பு மற்றும் உற்பத்தி முறைகள் காரணமாக, ஜேர்மன் நிறுவனங்கள் மட்டுமல்ல, சர்வதேச நிறுவனங்களும், வேறு நாடுகளுக்கு செல்வோம். அங்கு அது எளிதாக இருக்கிறது" என்று கூறுகின்றன.

மாறாக கிளீன் சிறிலங்கா திட்டத்தை ஜேர்மன் நிறுவனங்கள் வரவேற்கின்றன. சுத்தமான இலங்கை என்ற நிலைப்பாடு சரியானது, ஆனால் இந்த அனைத்து புதிய கொள்கைகளையும் அதிகாரத்து வத்திற்குள்ளும், சட்டம் இயற்றும் வழி முறைகளுக்குள்ளும் செயல்படுத்துவது எவ்வளவு விரைவாக இருக்கிறதோ, அவ் வளவு சிறந்தது, அப்போதுதான் அதிக முதலீடுகள் வரும். ஜேர்மன் மக்கள் இலங்கையின் சமூகத்தை விட வயதான சமூகம். உங்களுக்கு வயதாகும்போது, நீங்கள் குறைவாகவே நுகர முடியும், ஏனென்றால் உங்கள் உடல் விரிவான விளையாட்டுகளைச் செய்யவோ அல் லது ஒவ்வொரு நாளும் அதிக உணவு உண்ணவோ உங்களை அனுமதிக்காது. எனவே, நாங்கள் ஏற்றுமதி செய்வதற் கும், முதலீடு செய்வதற்கும் வடிவமைக் கப்பட்டுள்ளோம்.

பணம் சுற்றிக் கொண்டிருக்கிறது, அது சாதகமான சூழ்நிலைகளைத் தேடு கிறது. இலங்கைக்கு ஏற்கனவே நிறையச் சாதகமான அம்சங்கள் உள்ளன. இந்திய பெருங்கடலில் அதன் நிலை, சட்டத்தின் ஆட்சி பகிரப்பட்ட மதிப்புகள் என்பன வற்றை குறிப்பிடலாம். இந்தக் கொள் கைகளின் அமலாக்கத்தை அது மேம்ப டுத்த முடியும், அப்போது மேலும் முதலீடுகள் வரும்-என்றார். (அ)

## அரச, தனியார்...

சேவையின் எதிர்கால திட்ட முன்மொழிவு குறித்தும் அதன் சவால்களை ஆராயும் முகமாகவும், யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிக ளது பிரசன்னத்துடன் நேற்று கள விஜயம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களான க.இளங்குமரன், கஜேந்திர குமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் மற்றும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சிவகரன், வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் சுதர்சன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், யாழ். மாநகர மற்றும் பிரதேச செயலக அதிகா ரிகள், நகர அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர்கள், துறைசார் அதிகா ரிகள், தனியார் போக்குவரத்து சேவை யின் தலைவர், அரச போக்குவரத்து சபை யின் அதிகாரிகள் உள்ளிட்ட உயர் அதி காரிகள் குழுவே குறித்த கள விஜயத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த விஜயத்தின்போது நெடுந்தூர சேவை பேருந்து நிலையம், இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். மத்திய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதி களை பார்வையிட்டதுடன், குறித்த இரு பேருந்து நிலையங்களின் அதிகாரிகளு டனும் கலந்துரையாடி, இருக்கும் சவால்கள் குறித்து கேட்டறிந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இராணுவ பயிற்சியில் கைக்குண்டு வெடிப்பு!

### மூன்று படையினர் காயம்!!

கொழும்பு,ஒக். 30

இராணுவப் பயிற்சியின்போது கைக்குண்டு வெடித்து இடம்பெற்ற விபத்தில் இராணுவத்தினர் மூவர் காயமடைந்துள்ளனர்.

மாதுரு ஓயா இராணுவப் பயிற்சி முகாமில் நேற்று காலை இந்த விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.

இதன்போது இராணுவத்தினர் மூவர் கால்களில் காயம் அடைந்த நிலையில் பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை இராணுவத்துக்கும் ரஷ்ய இராணுவத்துக்கும் இடையில் நடைபெறும் இராணுவப் பயிற்சியின் போது இந்த விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகிறது. (அ)

## சட்டவிரோதமாக தமிழ்நாடு சென்ற மூன்று இலங்கையர் நாடு கடத்தல்!

சென்னை, ஒக். 30

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக தமிழ்நாட்டுக்கு சென்றிருந்த மூவர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 15 நாட்களுக்கு முன்னர் படகில் குறித்த மூவரும் தமிழ்நாட்டுக்குள் நுழைந்து, சென்னை மண்ணடியில் தங்கியிருந்த வேளையில் நேற்று முன்தினம் தனிப்படை பொலிஸார் மூவரையும் கைது செய்தனர்.

குறித்த மூன்று பேரிடமும் இந்தியாவில் தங்குவதற்கான எதுவித ஆவணமும் இல்லை என்பதோடு அவர்கள் மீது இலங்கையில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இலங்கை பொருளாதாரம் 2026 இல் 3.1 வீதம் வளர்ச்சி!

### சர்வதேச நாணய நிதியம் கணிப்பு

கொழும்பு, ஒக். 30

**இலங்கையின் பொருளாதாரம் அடுத்த ஆண்டு 3.1 வீதம் வளர்ச்சியடையும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**




சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் துறையின் பிரதிப் பணிப்பாளர் தோமஸ் ஹெல்ப்ளின் ஒரு செய்தியாளர் சந்திப்பில் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை 2022 - 2023 காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடியால் கடுமையான மந்தநிலையை சந்தித்தது.

அதன் பின்னர் இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் ஒரு சீர்திருத்த திட்டத்தை மேற்கொண்டது, இதன் விளைவாக வலுவான பொருளாதார மீட்சியொன்று ஏற்பட்டது.

கடந்த ஆண்டில் வளர்ச்சி விகிதம் சுமார் 5 வீதமாக இருந்தது. இந்த ஆண்டின் முதல் அரைப் பகுதியில் அது 4.8 வீதமாக இருந்தது.

இந்த வலுவான மீட்சியின் ஒரு பகுதி வழக்கமான பொருளாதார செயற்பாடுகள் மீண்டும் இயல்புக்கு வந்ததாலேயே ஏற்பட்டது.

எனவே, அந்த வளர்ச்சியின் ஒரு பகுதி தற்காலிகமானது என்று நாங்கள் கருதுகிறோம்.

இலங்கை தனது நிலையான வளர்ச்சிப் பாதையான 3.1 வீதத்திற்குத் திரும்பி வருகிறது.

மேலும் 2024 மற்றும் 2025 இல் எதிர்பார்த்ததை விட வேகமான மீட்சியைக் கண்டதால், அந்த நிலையான வளர்ச்சிக்கு திரும்பும் காலம் சிறிது முன்னதாகவே நடைபெறுகிறது என்று நாங்கள் காண்கிறோம்.

திட்டம் மற்றும் மின்சார விலை நிர்ணயம் குறித்து பேசும்போது-அந்தத் திட்டத்தின் ஐந்தாவது மதிப்பீட்டுக்காக சர்வதேச நாணய நிதிய பணியகம் இலங்கையில் பணியாற்றியது.

அவர்கள் ஒக்ரோபர் 9 அல்லது 10 ஆம் திகதியளவில் பணியாளர்கள் மட்டத்தில் ஒரு ஒப்பந்தத்தை அடைந்தனர்.

இது வெறும் பணியக மட்ட ஒப்பந்தம் மட்டுமே. ஆனால் இது, நாணய நிதியத்தின் திருப்தியை வெளிப்படுத்தும் ஒரு அறிகுறியாகும்.

மேலும், மின்சார விலை நிர்ணயம் என்பது தொடர்ச்சியான கட்டமைப்பு அளவுகோல் ஆகும்.

இது அரச துறைகள், குறிப்பாக மின்சார நிறுவனங்கள் போன்ற அரசுடைமை நிறுவனங்களால் அரச பட்ஜெட்டுக்கும் வரி செலுத்துநர்களுக்கும் ஏற்படும் அபாயங்களை குறைக்கும் நோக்கத்தைக் கொண்டது.

செலவு மீட்பு என்ற கொள்கை, இந்த சீர்திருத்தத் திட்டத்தின் முக்கியமான அடிப்படை கொள்கையாகும்.

மேலும் அரசு தொடர்ந்து செயல்திறன் குறியீடுகளை பூர்த்தி செய்து வருகிறது.

எனவே, ஒக்ரோபர் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு நேர்மறையாக இருந்தது.

ஆனால் அடுத்த மதிப்பீட்டின் முடிவைப் பற்றி இப்போது கூற முடியாது.

இறுதியாக, 2028 ஆம் ஆண்டுக்கான வருவாய் முன்னறிவிப்புகள் குறித்து-இந்தத் திட்டத்தின் முன்னறிவிப்புகள் தற்போதைய ஆண்டும் அடுத்த ஆண்டும் மையப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, சீர்திருத்தங்கள் முன்னேற்றமடைந்து வருகின்றன.

இலங்கை தனது சொந்த சீர்திருத்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி, பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வந்து, முழுமையாக நிலைப்படுத்துவது மிக முக்கியம்-என்றார். (அ)

## கடலில் மிதந்து வந்த போத்தலினால் புத்தளத்தில் பறிபோன இரு உயிர்கள்!

கொழும்பு, ஒக். 30

புத்தளம் பகுதியில் கடலில் மிதந்து கொண்டிருந்த போத்லில் இருந்த திரவத்தை அருந்திய இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த திரவத்தை அருந்திய மேலும் இருவர் தற்போது புத்தளம் வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

புத்தளம், நுரைச்சோலை பகுதியில் உள்ள ஒரு மீன்பிடி வாடியில் இருந்தபோது நான்கு பேர் கொண்ட குழு இந்த திரவத்தை அருந்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் ஒருவர் இறந்ததை தொடர்ந்து, பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர்.

அதன் பின்னர், மீன்பிடி வாடியிலிருந்த மற்றொரு நபரின் உடலை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

சம்பவம் தொட்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## பழைய முறைமையின் கீழ் மாகாண தேர்தலை நடத்துக!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஒக். 30



மாகாண சபைத் தேர்தலை பழைய முறை மையின்கீழ் விரைவில் நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

தனியார் ஊடக மொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரான, பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேன சிங்க மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

“மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். பழைய முறைமையின்கீழ் அத்தேர்தலை நடத்தலாம். அவ்வாறு இல்லையேல் தேர்தல் மேலும் இழுத்தடிக்கப்படக்கூடும். விரைவில் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையையே நாம் விடுக்கின்றோம்.

மாகாணசபை முறைமைமீது எனக்கு நம்பிக்கை இல்லை. எனினும், வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு மாகாணசபை முறைமை அவசியம். அதனை நான் ஏற்கின்றேன். அதற்குரிய நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.” எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## பழைய முறைமையின் கீழ் மாகாண தேர்தலை நடத்துக!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஒக். 30

மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையின்கீழ் விரைவில் நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரான, பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க மேற்கண்டவாறு வலியுறுத்தினார் .

“மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். பழைய முறைமையின்கீழ் அத்தேர்தலை நடத்தலாம். அவ்வாறு இல்லையேல் தேர்தல் மேலும், இழுத்தடிக்கப்படக்கூடும். விரைவில் தேர்தல் நடத்தப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையையே நாம் விடுக்கின்றோம்.

மாகாணசபை முறைமைமீது எனக்கு நம்பிக்கை இல்லை. எனினும், வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு மாகாணசபை முறைமை அவசியம். அதனை நான் ஏற்கின்றேன். அதற்குரிய நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.” எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## நாட்டில் மீண்டும் மலேரியா?

கொழும்பு, ஒக். 30

இலங்கையில் மலேரியா நோய்த்தொற்று மீண்டும் பரவக்கூடும் என்ற அச்சத்தைச் சுகாதார அதிகாரிகள் வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளிடையே மலேரியா நோய்த்தொற்று அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் இதுவரை 27 பேர் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலோர் வெளிநாடுகளிலிருந்தபோது தொற்றுக்குள்ளான இலங்கையர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் அனைவரையும் மலேரியா பரிசோதனைக்குட்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது இரண்டு டெங்கு வைரஸ் வகைகள் அதிகமாகக் காணப்படுகின்றன என்றும், நுளம்பு இனப்பெருக்க இடங்களை ஒழிக்கப் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குவது மிக முக்கியம் என்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது. (அ)

## தேசிய புலனாய்வுச் சேவைக்கு தலைவராக நலிந்த நியங்கொட

கொழும்பு, ஒக். 30

தேசிய புலனாய்வு சேவையின் புதிய தலைமையதிகாரியாக மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) நலிந்த நியங்கொட நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய புலனாய்வுச் சேவையின் தலைமையதிகாரியாக கடமையாற்றி வந்த மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய நேற்று முன் தினம் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

60 வயது பூர்த்தியானதன் காரணமாகவே அவர் ஓய்வு பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு அறிக்கை வெளியிட்டுத் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org